
பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 31 | சனிக்கிழமை | 14.02.2026 | அதிர்வு 198 |
|---|---|---|---|---|---|


## கொலையில் முடிந்த குடும்பத் தகராறு!

### பெற்றோல் குண்டு வீச்சில் மனைவி பலி; கணவன் தலைமறைவு



கணவன் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியதில் மனைவி தீக்கிரையாகி 07▶





### கூட்டாட்சித் தீர்வு குறித்த கலந்துரையாடல்:

# தமிழ்த் தேசியப் பேரவையின் அழைப்பை நிராகரித்த தமிழரசு

## கஜேந்திரகுமாருக்கு சிவஞானம் பதில் கடிதம்

(எஸ்.நிதர்ஷன்)

அரசு கொண்டுவரவுள்ள 'ஏக்கிய இராஜ்ய' (ஒற்றையாட்சி) அரசமைப்பு வரைபை நிராகரித்து, கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வை வலியுறுத்தித் தமிழ்த் தரப்புகள் ஒன்றிணைந்து செயற்பட விடுக்கப்பட்ட அழைப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சி நிராகரித்துள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலிலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. 05▶

# பத்தரமுல்லையில் ஜீப் வாகனத்தில் இருந்த சட்டத்தரணியும் மனைவியும் சுட்டுக்கொலை

## நேற்று மாலை பயங்கரம்





கொழும்பு, பத்தரமுல்லை – அக்குரேகொட பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் குறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள ஆரம்ப கட்ட தகவல்கள் வருமாறு:– 05▶




அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து விலகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வழங்கிய பணிப்புரையை அடுத்து, அந்தப் பதவியை விட்டு விலகுவதற்கு சிறிதரன் மறுத்த பின்னணியில், அவரது நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி பறிக்கப்பட்டிருக்கின்றது. இது பற்றிய முடிவை கட்சியின் அரசியல் குழு எடுத்த போது, அதற்கு எதிராக ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில், சிறிதரனுக்கு ஆதரவு வெளிப்படுத்தும் முகமாக, கிளிநொச்சியில் இளைஞர் அணியின் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டன எனக் குறிப்பிட்டு இருந்தேன்.

அது, இப்போது வேறு விதமாக இன்று நடத்தப்படும் என்று முக நூல் பக்கங்களில் செய்திகள் வந்துள்ளன.

'ஈழ தேசத்தின் பாசக் குரல்' என்ற தலைப்பில் 'பாராளுமன்ற குழுத் தலைவர் பதவி சட்ட விரோதமாக பறித்தமையை கண்டித்து அநீதிக்கான ஒன்று கூடல்' என்ற பெயரில் ஒரு கூட்டம் 06▶





# அரச காணியை அடாத்தாக சுவீகரித்தவர்கள் துவக்கால் சுடுவோமென மிரட்டுகின்றார்கள்!

## வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணியில் நீதி கோரும் விவசாயிகள்

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் விவசாயிகள் விவசாயம் செய்துவந்த பல ஏக்கர் அரச காணி தனி நபர் ஒருவரால் அடாத்தாக சுவீகரிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த விவசாயிகள் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி J/ 432 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்கள் விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் இருந்து விவசாயம் செய்து வந்த நிலையில் அப்பகுதியில் காணப் பட்ட பல ஏக்கர் கணக்கான அரச காணி தனி நபர் ஒருவரால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.



அத்துமீறி அடைக்கப்பட்ட அந்தக் காணி அரசகாணி எனவும், நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிராம சேவையாளருக்கு பிரதேச செயலர் உத்தரவிட்டுள்ள நிலையில் இதுவரை உரிய அதிகாரிகளால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆரம்ப காலத்தில் இருந்தே பயன் தரும் மரங்களை நட்டு காலாகாலம் நாம் விவசாயம் செய்துவந்த பகுதியை தனி நபர் ஒருவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சுவீகரித்துள்ளார்.

இந்தப் பகுதிக்கு நாம் செல்ல முற்பட்டால் இடியன் துவக்கால் சுடுவோம் என்றும், பொலிஸாரை வைத்துக் கைது செய்வோம் என மிரட்டுகின்றனர்.

காலா காலம் நாம் பாதுகாத்து வந்த மணல் மற்றும் காடுகள் இரவோடு இரவாக அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக ஏனைய இடங்களுக்கு கடத்துகின்றனர்.

இந்தக் காணி அரச காணியென பிரதேச செயலர் அறிவித்தும் இதுவரை சம்ப்ந்தப்பட்டவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமைக்கான காரணம் என்ன? எமது விவசாய நிலத்தை மீட்டு எம் மிடமே ஒப்படைக்க வேண்டும். - என்று தெரிவித்தனர்.







# வெடுக்குநாறி ஆலயத்தில் இம்முறை சுதந்திரமான சிவராத்திரி வழிபாடுகளுக்கு அனுமதி அளியுங்கள்!

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை



(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சைவ மக்கள் சுதந்திரமாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படவேண்டும் எனவும் சைவ மக்களின் வழிபாட்டுரிமை பாதுக்கப்பட வேண்டும் எனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக்கூட்டம் இன்று நேற்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெடுக்குநாறி மலையில் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற சிவராத்திரி தின வழிபாடுகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் மீது பொலிஸாரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்தோடு பக்தர்களுக்குரிய குடிதண்ணீரை ஆலயப் பகுதிக்குள் எடுத்துச் செல்வதற்குத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதனால் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்கதர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

எனவே இம்முறை சிவராத்திரி தின வழிபாடுகளுக்கு அவ்வாறான இடையூறுகள் ஏற்படுத்தக்கூடாது. சைவ மக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான சைவ மக்களின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்படவேண்டும். - எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் இம்முறை தடைகளின்றி சுதந்திரமாக மக்கள் வழிபடுவதற்குரிய வழிவகைகள் ஏற்படுத்தப்படுமென வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் தேசிய மக்கள் சக்தி சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்களால் பதில் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தருகின்ற அடியவர்களுக்கு குடி தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு வவுனியா வடக்கு பிரதேசசபைத் தவிசாளருக்கு இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்கள் தெரிவித்திருந்தார்.










# சட்டவிரோத மீன்பிடியை தடைசெய்யக்கோரி முல்லைத்தீவு மீனவர்கள் நேற்றுப் போராட்டம்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடைசெய்யக்கோரி முல்லைத்தீவு மீனவர்கள் நேற்றொ போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தொ போராட்டத்தில் சட்டவிரோத தொழில் அதிகரிப்பு, சிறுதொழில் மீனவர்கள் வாழ்வு பாதிப்பு, சட்டவிரோத தொழிலைத் தடைசெய், சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்கு எதிராக அநுர அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளிலிருந்து பின்வாங்காதே எனப் பல கோசங்களுடன் நடைபவனியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு வருகைதந்த மீனவர்கள் போராட்டக் கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம்கையளித்தனர்.

தொடர்ந்து போராட்டக்காரர்களுக்கும் ஊடகங்களுக்கும் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில் - முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 20 வீதமானவர்கள் மீன்பிடித் துறையில் ஈடுபட்டுள்ளனர்.சுமார் 71 கிலோ மீற்றருக்கும் அதிகமாக கடல் கரை உள்ளது..

மீன் வளம் சட்டவிரோத முறையில் அழிக்கப்படுவகின்றது. தற்போதய அரசாங்கத்தின் கொள்கை இயன்றவரை சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துவதாகும். எமது மாவட்டத்தில் மீன்பிடித் துறைப் பிரச்சனையிலும் பார்க்க அதிகமாக இருந்த போதைப் பொருள் பிரச்சினை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. போராட்டகாரர்களின் கோரிக்கையை நான் அரசாங்கத்திற்கு அனுப்புவேன். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீனவர்களுக்கு சாதகமாக இருக்கும் என நம்பிக்கை உள்ளது. - என்றார்.











# இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து!

## ஒருவர் உயிரிழப்பு; மற்றொருவர் படுகாயம்



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி – பாலாவி பிரதான வீதியின் குரக்கஞ்சேனை பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து தெரியவருவதாவது:–

கற்பிட்டியிலிருந்து சென்ற மோட்டார் சைக்கிள், குரக்கஞ்சேனை கிராமத்திலிருந்து பிரதான வீதிக்கு வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது. இதன் போது இரண்டு மோட்டார் சைக்கிள்களிலும் பயணித்தவர்கள் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக கற்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். எனினும், புத்தளம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கற்பிட்டி, ஆனைவாசல் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்த மற்றவர் தற்போது புத்தளம் தள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ்த் தேசியப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

**கஜேந்திரகுமாரின் அழைப்பு**

தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வரும் விடயங்களை வலியுறுத்தியிருந்தார்:–

தமிழ் மக்கள் தேர்தல்கள் தோறும் சமஷ்டி தீர்வுக்கே ஆணை வழங்கி வருகின்றனர்.

ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, 2015 – 2019 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட ஒற்றையாட்சி (ஏக்கிய இராஜ்ய) வரைபை நிறைவேற்ற முனைகின்றது.

இந்தச் சதியை முறியடிக்கவும், தமிழ்த்தேசத்தின் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வை முன்வைக்கவும் தமிழ்த் தரப்புகள் ஓரணியில் திரள வேண்டும்.

**தவிர்த்துக் கொண்ட தமிழரசுக் கட்சி**

இந்த அழைப்புக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:–

“உங்களது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் பந்தியின் கருத்துக்களின் அடிப்படையில் (ஒற்றையாட்சி வரைவு தொடர்பான விமர்சனம்), நாளை (15.02.2026) நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்பது சாத்தியமற்றது. எனினும், ஒற்றையாட்சி முறையை முழுமையாக எதிர்ப்பதிலும், சமஷ்டி முறையை வலியுறுத்துவதிலும் எமது கட்சி என்றும் உறுதியாகவே உள்ளது.”

**அரசியல் முக்கியத்துவம்**

அரசு புதிய அரசமைப்பை நோக்கி நகரும் இக்கட்டான சூழலில், தமிழ்த் தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியாக ஒன்றிணைவதில் மீண்டும் சிக்கல்கள் எழுந்துள்ளமையை இந்தச் சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது.

இருப்பினும், நாளை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பத்தரமுல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

**திட்டமிட்ட தாக்குதல்**

நேற்று மாலை 5 மணியளவில் அக்குரேகொட பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு அருகில் இந்தத் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்துள்ளது. மேற்படி சட்டத்தரணியும் அவரது மனைவியும் தங்களது ஜீப் ரக வாகனத்தில் அமர்ந்திருந்த வேளையில், சிறிய ரக வாகனமொன்றில் வந்த ஆயுததாரிகள் இத்தாக்குதலை முன்னெடுத்துள்ளனர்.

**ரி - 56 ரக துப்பாக்கிப் பிரயோகம்**

தாக்குதலுக்கு வந்த குழுவினர் ரி – 56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்திச் சரமாரியாகச் சுட்டுவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பியோடியுள்ளனர். படுகாயமடைந்த இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப் படுத்தியுள்ளன.

**உயிரிழந்தவர்கள் விவரம்**

இச்சம்பவத்தில் புத்திக மல்லவாரச்சி என்ற சட்டத்தரணியும் அவரது மனைவியுமே உயிரிழந்துள்ளனர்.

**பாதாள உலகக் குழுவுடன் தொடர்பு**

உயிரிழந்த சட்டத்தரணி, பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரான “கரந்தெனிய சுத்தா” என்பவருக்கு எதிரான வழக்குகளில் முன்னிலையாகி வந்தவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதனால், இந்தப் படுகொலைகள் பாதாள உலகக்குழுக்களுக்கிடையிலான பழிவாங்கலாக இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காகப் பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று காலை 9:30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறும் என அந்தப் பக்கத்தில் செய்திகள் விளம்பரங்கள் வெளியாகி உள்ளன.

வழக்கமாக நீதி கோரி, நீதிக்கான ஒன்று கூடல் நடப்பதாகத்தான் நாங்கள் அறிந்திருக்கிறோம். இது 'அநீதிக்கான ஒன்று கூடல்' என்ற பெயரில் கூட்டப்படுகின்ற வியப்பான – விந்தையான – கூட்டமாக உள்ளது. யார் அதைக் கூட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. சிறிதரனின் ஆதரவுடன்தான் அது நடக்கின்றதா என்பதும் தெரியவில்லை. அல்லது சிறிதரனின் எதிரணியினர்தான் அதனை இப்படி நையாண்டித்தனமாக ஒன்றை




அறிவித்துள்ளார்களோ யாமறியோம்.

சிறிதரனின் செயலை அநீதியாகக் காட்டி, அதற்கான ஒன்றுகூடலுக்குரிய




அழைப்போ இது தெரியவில்லை. ஆனால் நேற்றிரவு கிளிநொச்சி எங்கும் 'தமிழ்த் தேசியத்தின் பெயரால் இராணுவ மயமாக்கலுக்கு துணைபோகாதே' என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டி பரவலாக




ஒட்டப்பட்டிருந்தது.

ஆக, கிளிநொச்சியில் சின்ன ஜமீனுக்கு எதிர் ஜமீன் உருவாகி வருகின்றது என்பதுதான் களநிலைமை போலும். அங்கு இனியும் தனிக் காட்டு ராஜா கதை எடுபடுமா என்பது அடுத்து வரும் நாள்களில் தெளிவாகும் என் எதிர்பார்க்கலாம்.

இதற்கிடையில் கட்சியினுடைய தீர்மானங்கள் – முடிவுகளை – பகிரங்க வெளியில் விமர்சிப்பவர்கள், தவறாகப் பிரச்சாரம் செய்யும் கட்சி உறுப்பினர்களுக்கு



எதிராகக் கட்சி ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

கட்சியின் அரசியல் குழு எடுத்த முடிவை கட்சி நடைமுறைப்படுத்தியுள்ள பின்னணியில், அதை ஒட்டி கிளிநொச்சியில் இன்று நடத்தப்படக்கூடிய நிகழ்வில் பங்குபற்றும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகவும் இத்தகைய நடவடிக்கை பாயக்கூடிய ஆபத்து உண்டு.

ஏற்கனவே கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனுக்கு எதிராகக் காட்டமான எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை கட்சித் தலைவர் சி.வி.கேசிவஞானத்தின் வழிகாட்டலில் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் அனுப்பி இருக்கிறார் என அறிய வந்தது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சில விவகாரங்களை ஒட்டிய கட்சி விரோத நடவடிக்கைகள் தொடர்பாக முன்னரும் சிறிநேசனிடம் ஓரிரு தடவைகள் விளக்கம் கோரப்பட்டிருந்தது. அது தொடர்பாக சிறிநேசன் அனுப்பி வைத்த விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக அமையவில்லை என்று சுட்டிக்காட்டி புதிய எச்சரிக்கை கடிதம் இப்போது அவருக்குப் பறந்திருக்கிறது.

அவருக்கு எதிரான நடவடிக்கைக்கான கோவை அல்லது கோப்பு (File) கட்டி எழுப்பப்படுகின்றது. அதன் விளைவுகள், பாதிப்புகள் குறித்து சிறிநேசனுக்கு தகுந்த புரிதல் இருக்கும் என்று நினைக்கிறேன். அதில் மாட்டாமல் தவிர்த்துக் கொள்வது அவரது திறமையைப் பொறுத்தது. அவருக்குத் தற்போதைய நாடாளுமன்றத்தில் இன்னும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பதவி காலம் எஞ்சியுள்ளது. இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை அரசமைப்பு உருவாக்கத்திற்காக இந்த அரசு நீடிக்கக்கூடிய வாய்ப்பும் உள்ளது. இந்தச் சமயத்தில் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கெட்டியாகவும், உறுதியாகவும் பிடித்துக் கொள்வதில் சிறிநேசன் 'ஸ்மார்ட்டாக' இருப்பார் என்று நினைக்கிறேன்.

* * *

வெளிநாடுகளில் இருந்து கொண்டும் அல்லது வெளிநாடுகளில் ஊடக வலையமைப்பை பதிவு செய்து வைத்துக் கொண்டும் உள்நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராக சமூக ஊடகங்கள் ஊடாக நொட்டிக் கொண்டிருப்பவர்கள் நெருக்கடியை எதிர்கொள்ளக் கூடிய சூழல் உருவாகி இருக்கிறது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள இணைய வழி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கனகாத்திரமான நடவடிக்கை எடுக்கக் கூடிய வழிவகைகள் இருக்கின்றன என்று கூறப்பட்டாலும் இது விடயத்தில் முதலாவது நடவடிக்கையை – அதிரடியான நகர்வை – இலங்கைத் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எடுத்திருக்கிறார்.

தமக்கு எதிராக பொறுப்பு கூறும் கடப்பாடு இல்லை என்ற நினைப்போடு பல தரப்பினரும் பகிர்ந்து வந்த அல்லது வெளியிட்டு வந்த அபாண்டமான – சோடிக்கப்பட்ட – செய்திகளுக்கு எதிராக வேட்டு வைக்கும் நடவடிக்கை ஒன்றை அவர் எடுத்திருக்கிறார்.

அவர் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளில் அவர் பக்க வாதங்களை செவிமடுத்த பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் முக்கிய ஊடகங்கள் மற்றும் ஊடக தரப்புக்கள், ஊடக நபர்கள் போன்றோருக்கு எதிராக இடைக்காலத் தடை ஆணை ஒன்றைப் பிறப்பித்து இருக்கின்றது.

அதன்படி வழக்கு விசாரணை முடியும் வரை சாணக்கியனை இழிவுபடுத்தி அல்லது தவறான முறையில் அல்லது மோசமாக விமர்சித்து செய்தி வெளியிட, பிரசுரிக்க, ஒலி பரப்ப, ஒளி பரப்பத் தடை விதித்திருக்கின்றது நீதிமன்றம்.

ஐ.பி.சி. நிறுவனம், ஐ.பி.சி. தமிழ், ஸ்மார்ட் செய்தி சேவை, லங்காசிறி இணைய சேவை, தமிழ்வின் முதலிய பல நிறுவனங்களுக்கும் அவற்றோடு தொடர்புபட்ட பாஸ்கரன் கந்தையா, நிராஜ் பட்ரிக் டேவிட், அசோக் லூயி மரியநாயகம் என்னும் தமிழரசன் முதலிய பல டசின் தரப்பினருக்கு எதிராக ஒரு வழக்கில் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இன்னொரு வழக்கில் பாக்கியசெல்வம் அரியநேத்திரன், உமாகரன் இராசையா உட்பட 25 பேருக்கு எதிராக தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பிலும் பிற இடங்களிலும் முகப்புத்தகக் கணக்குகளை வைத்துக்கொண்டு நொட்டிக்கொண்டு இருப்பவர்கள் சிக்கலில் மாட்டியிருக்கிறார்கள்.

தவிரவும் இவர்களது செய்திகளை காவும் facebook, மெட்டா, கூகுள், யூடியூப் போன்றவற்றுக்கு எதிராகவும் நீதிமன்றம் இதே தடை உத்தரவை வழங்கியிருக்கின்றது.

இந்த தடையாணையை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஒரே சமயத்தில் நீதிமன்றம் மூலம் அனுப்புவதற்கு பெரும் செலவு அமையும் என்ற போதிலும் அவற்றைத் தாண்டி வழக்கு முன்னெடுக்கப்படுகின்றது.

முகப்புத்தக கணக்குகளை வைத்திருப்பவர்கள், whatsapp செயலி ஊடாக பிரசாரங்களை முன்னெடுக்கின்ற அரியநேத்திரன் போன்றோர், இணைய வழியில் செய்திகளை எடுத்துச் செல்லுகின்ற நிறுவனங்கள் போன்ற தரப்புகள் நேரடியாக நீதிமன்றின் வழிகாட்டலுக்குள் வரவேண்டிய இக்கட்டில் மாட்டி இருக்கின்றன.

இனிமேல் சாணக்கியனை இத்தரப்பினர் கண்மூடித் தூற்ற முனைந்தால் இலங்கையின் இணைய வழி பாதுகாப்பு சட்டம் கறாராகப் பாயும் என்று தெரிகிறது.

இணையவழி சட்டத்தை தமிழர் தரப்பில் சரியாக பயன்படுத்தும் நடவடிக்கை கட்டவிழத் தொடங்கியிருக்கின்றது

கொழும்பு நீதிவான் அஸங்க போதாரகம இந்த உத்தரவை வழங்கியிருக்கிறார். சாணக்கியன் சார்பில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் முன்னிலையாகி இந்த உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள்.

சுமந்திரனுக்கு எதிராகவும் ஆதாரங்கள், உண்மை விவரங்கள் இல்லாமல் சகட்டு மேனிக்கு சமூக ஊடகங்கள் ஊடாகஅர்ச்சனைபுரிபவர்களுக்குஎதிராக அடுத்த கட்ட நகர்வு ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு பிணை இல்லை: சட்டங்களை உருவாக்குவதில் அரசாங்கம் அவதானம்



போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்த பின்னர், அவர்களுக்கு பிணை வழங்காமல் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை தடுப்புக் காவலில் வைப்பதற்கான சட்டங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த நிலையில், அவர்கள் பிணையில் செல்ல கோரிக்கை விடுக்கும் போது, அவர்களுக்கு பிணை வழங்காமல் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை தடுப்பில் வைக்க முடியுமா என்பது குறித்து தற்போது ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள நச்சுப் பொருள் சட்டத் திருத்தத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் திருத்தம் ஒன்றை கொண்டுவரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குற்றச்செயல்களின் மூலம் பெற்றுக்கொண்ட சொத்துகளை பறிமுதல் செய்யும் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு அமைய, பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

## கொலையில் முடிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் துயரச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அனுராதபுரம், பரசன்கஸ்வெவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண் பரசன்கஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவராவார்.

கணவன் மற்றும் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக கணவன் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியுள்ளார்.

இதன்போது வீட்டினுள் இருந்த மனைவி தீக்கிரையாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரான கணவன் பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பரசன்கஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் கோர முகம்

''நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் காட்டிலும் பாரதூரமான வகையில் - மிக மோசமான விதத்தில் - பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவு சட்டமானால் நாட்டின் ஜனநாயகம் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் சவப்பெட்டிக்குள் செல்லும். இந்தச் சட்ட மூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவேன்'' - என முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

பொரளையில் உள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

கொடூரமான - குரூரமான - காட்டுமிராண்டித்தனமான - மிருகத்தனமான - சட்டம் என்று உலகமே மோசமாக விமர்சிக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் - 2022 இல் - கோட்டாபயவின் காலத்தில் - ஒரு சில திருத்தங்களைச் செய்து விட்டு, அந்தச் சட்டம் புனித சட்டமாகிவிட்டது என்பது போல கதை விட்ட சட்ட மேதை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் என்பதை மறந்து விட முடியாது. ஆளும் கட்சியின் ஏவலாளாக இல்லாமல் இப்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றமையால் அவரது சட்டப் புலமை நேர்மையாக - உண்மையாக - மனசாட்சிப்படி - பேசுவதாகவே தோன்றுகின்றது.

★ பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவில் 'பயங்கரவாதம்' என்பதற்கு விரிவான வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளது. இது தனிமனித சுதந்திரம் மற்றும் வாழ்க்கைக்கு மிக மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

★ 13 சாதாரண குற்றங்கள் இந்த சட்டவரைவில் பயங்கரவாதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ நீதிமன்றத் தடுப்புக்காவலில் உள்ள ஒருவரை நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கும் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அளிக்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

★ அதேபோல் ஜனாதிபதிக்கும் வரையறையற்ற வகையில் அதிகாரங்களை வழங்குவதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது எண்ணப்படி அமைப்புக்களை சட்டவிரோதமானது என்று அறிவிக்கலாம். அதேபோல் பொது இடங்களையும் 'தடை செய்யப்பட்ட பகுதி' என்று அறிவிக்கலாம். தடை நீக்கும் காலத்தை ஜனாதிபதியே அவரது தற்றுணிவின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கலாம் என்கிறது இச் சட்டம்.

★ ஜனாதிபதியால் தடை செய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பகுதியை அல்லது இடத்தை ஊடகவியலாளர்கள் அறிக்கையிட்டால் 3 வருட கடூழிய சிறைதண்டனைக்கு உள்ளாகுவார்கள். அல்லது 30 லட்சம் ரூபா தண்டப்பண செலுத்தலுக்கு உள்ளாகுவார்கள்.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாக புதிய சட்டத்தை இயற்றுவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் ஜனநாயகத்துக்கும், தனிமனித சுதந்திரத்துக்கும் துரதிஷ்டமான சட்டவரைவை வெளியிட்டுள்ளது. - என்று குறிப்பிட்டுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந்தச் சட்டவரைவு, சட்டமூலமாக்கப்பட்டு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன், சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவேன் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் உண்மையான கோர முகத்தை அம்பலப்படுத்தி நிற்கின்றது இந்தச் சட்ட மூலம்.



# கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்காக அயராது உழைத்த அருணாச்சலம் உபாத்தியாயர்

## இறுதி அஞ்சலியில் லலீசன் புகழாரம்

**(செல்லையா பேரின்பராசா)**

சைவத்தையும் தமிழையும் வாழ வைப்பதற்காக அயராது உழைத்த காரைநகரைச் சேர்ந்த அருணாச்சலம் உபாத்தியாயர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தோற்றம் பெறுவற்கு அடித்தளம் இட்டவர். இதனை பழைய புத்தகங்களிலும் இணையத்தளங்களிலும் காண முடியும். அஃதே காரைநகரைச் சேர்ந்த பலர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் வளர்ச்சியில் பங்குதாரர்களாக உள்ளனர். இந்த வழியில் போர்ச் சூழல் நிலவிய இடர் மிகுந்த காலமாகிய 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக் கலாசாலயின் அதிபராகவிருந்து வழிநடாத்திய பெருமகன் மு.பரஞ்சோதி ஐயா இக் கலாசாலை வரலாற்றில் தனது அர்ப்பணிப்பான சேவைகளால் தடம் பதித்த ஒருவர்.

– இவ்வாறு கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வரும் பட்டிமன்றப் பேச்சாளருமான சந்திரமௌலீசன் லலீசன் புகழாரம் சூட்டினார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் முன்னாள் பிரதி முதல்வரும் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் முதல்வருமான மு.பரஞ்சோதியின் அஞ்சலிக் கூட்டம் ஆசிரியர் எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் காரைநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சந்திரமௌலீசன் லலீசன் மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:–

அமரர் மு.பரஞ்சோதி ஐயா கணித பாட விரிவுரையாளர் மட்டுமன்றி சிறந்த பண்பாளர். இவர் தன்னிடம் பயின்ற மாணவர்களுக்கு நன்றி உணர்வை சிறப்பாக போதித்துள்ளார். தற்காலத்தில் நன்றி உணர்வை காண்பது அரிது. எனினும் இவரிடம் 36 வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பற்சி கலாசாலையில் பயின்ற ஆசிரிய மாணவர்கள் யாழ் காரைநகர் மண்ணிற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்துவது அன்னாரின் சேவைக்கு சிறந்த சான்று.

இந்த உலகில் பிறந்த ஒவ்வருவரும் என்றோ ஓர் நாள் இறந்தே ஆகவேண்டும். இன்று மலர் மஞ்சத்தில் நீள் உறக்கம் கொள்ளும் பரஞ்சோதி ஐயா பிறர் தலையை தடவி வளர்த்த பெருமகன். இதன் பயனாக அன்னாரின் பிள்ளைகளும் சமூகத்தில் சிறப்பாக உள்ளமையை நாம் காணலாம்.

அமரர் பரஞ்சோதி ஐயா என்னை நேரில் காண அவாவுற்றுள்ளதாக கல்வி அமைச்சில் பெரும் பதவி வகிக்கும் காரைநகரைச் சேர்ந்த பத்மானந்தன் ஐயா கூறியிருந்தார். இதற்கமைய கடந்த வருடம் இதே தினத்தில் இங்கு வந்து சந்தித்த போது அவர் ரமணிச்சந்திரன், சாண்டில்யன் போன்றவர்களின் நூல்களை வாசித்த வண்ணம் அந்திம காலத்திலும் வாசிப்பில் மூழ்கியிருந்தார்.

இந்த உலகில் என்ன பெருமை என்று கேட்டால் ஆளுக்கு ஆள் வெவ்வேறு விடை கூறுவோம். ஆனால் வள்ளுவர் நேற்று இருந்தவர் இன்றிருக்க நிச்சயம் கிடையாது என்கின்றார். இதுதான் மனித வாழ்க்கை. இதற்குள் நாம் மற்றவர் மதிக்கும் வண்ணம் அர்த்தமுள்ள வகையில் வாழ்ந்து காட்ட வேண்டும். இதனை கச்சிதமாக நிறைவேற்றி பரஞ்சோதி ஐயா விடைபெற்றுச் சென்றுள்ளார். – என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் ஓய்வுநிலை ஆசிரியர் துரை கணேசமூர்த்தி, மட்டக்களப்பில் இருந்து வருகைதந்த ஓய்வு நிலை அதிபர் க.பகீரதன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுநிலை அதிபருமான செல்லையா பேரின்பராசா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.











# களுவாஞ்சிகுடி நகரில் அதிகரித்துள்ள கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம்!

**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட பிரதான வீதிகளில் பகலிலும், இரவு வேளைகளிலும், கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக வியாபாரிகளும், பிரயாணிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் குறுக்கீடு செய்து திரிவதனால் வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றன. வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும் கடைகளிற்குள்ளும், ஏனைய வர்த்தக நிலையங்களிற்குள்ளும் புகுந்து அவை திரிகின்றன என அப்பகுதி வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

களுவாஞ்சிகுடி பிரதான சந்தியில தற்போது போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டு போக்குவரத்து ஒழுங்குகள் படிப்படியாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற இந்நிலையில், அதிக சனநடமாட்டமுள்ள பிரதான வீதி, பொதுச் சந்தை தொகுதி, பட்டிருப்பு சந்தி, வைத்தியசாலை வீதி உள்ளிட்ட பல இடங்களிலும் இவ்வாறு கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்து.

அப்பகுதியில் தமது வியாபாரங்களைச் சுமுகமான முறையில் மேற்கொள்வதற்கும், வீதி விபத்துக்களைத் தடுப்பதற்குமாக இவ்வாறு கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளை உடன் சம்மந்தப்பட்டவர்கள் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அப்பகுதி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக உரிய இறுக்கமான நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே தாம் வியாபார நடவடிக்கைகளைத் தங்கு தடையின்றி முன்னெடுக்க முடியும் எனபதோடு, பிரயாணிகளும், சிரமமின்றி பயணம் செய்ய முடியும் எனவும், அப்பகுதி வர்த்தகர்களும், பிரயாணிகளும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் களுவாஞ்சிகுடிப் பொலிஸாருடன் இணைந்து இப்பிரதேசத்திற்குள் இவ்வாறு கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளைக் கட்டுவதற்கும், மாடுகளின உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மண்முனை தென் எருவில் பற்று பிரதே சைபத் தகவல்கள் தெரிவிக்கின்றன.













# மாகாண சபைகள்: ஒரு முக்கிய திருப்புமுனை

## சுவிஸ் முன்னெடுப்புச் சந்திப்பு ஒத்திவைப்பு தமிழர் எதிர்காலம் குறித்துப் புதிய விவாதம்



-ராஜ் சிவநாதன் -

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான சுவிஸ் முன்னெடுப்பு கூட்டம் காலவரையற்ற முறையில் ஒத்திவைக்கப்பட்டிருப்பது, இலங்கையின் மாகாண சபை அமைப்பின் எதிர்காலத்தைப் பற்றிய புதிய விவாதங்களை உருவாக்கியுள்ளது.

தமிழ் அரசியல் ஒற்றுமையை உருவாக்கும் நோக்கில் தொடங்கியதாகத் தோன்றிய இந்த முயற்சி, உண்மையில் தமிழ் அரசியலின் உட்கட்டமைப்பு பலவீனங்களையும், தேசிய மக்கள் சக்தி (NPP) அரசின் நுணுக்கமான அரசியல் கணக்கீடுகளையும் வெளிப்படுத்தியுள்ளது. இது தனிப்பட்ட ஒரு சம்பவமாக கருதப்படக்கூடாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைதியாக உருவாகிக் கொண்டிருக்கும் பெரிய அரசியல் மாற்றத்தின் ஒரு பகுதியாக இதைப் பார்க்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவிருந்தனர். தமிழ் அரசியல் அணிகளுக்கிடையே ஒருமித்த கருத்தை உருவாக்குவதே அதன் நோக்கமாக இருந்தது. எனினும் அழைக்கப்பட்டவர்களின் அமைப்பும், கலந்துரையாடல்களின் சாத்தியமான திசையும் அரசியல் சந்தேகங்களை ஏற்படுத்தின. கூட்டம் நடை பெற்றிருந்தால், மாகாண சபை அமைப்பை நிராகரிக்கும் கடுமையான நிலைப்பாடு உருவாகியிருக்கலாம். அது கொழும்பு அரசுக்கு தமிழ் கட்சிகள் தாமே ஒருமித்தமற்றவை அல்லது நடைமுறை சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றன என்ற வாதத்தை வலுப்படுத்தியிருக்கும். ஒத்திவைப்பு உடனடி பதற்றத்தை தவிர்த்தாலும், தமிழ் அரசியல் ஒருங்கிணைப்பின் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் உருவான மாகாண சபை அமைப்பு அரசமைப்புச் சட்டத்தில் உறுதியான இடத்தை பெற்றுள்ளது. அதை நீக்குவதற்கான வெளிப்படையான முயற்சி தற்போதைய அரசால்மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தேர்தல்கள் தொடர்ந்து ஒத்திவைக்கப்படுகின்றன. அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு சிக்கலான அரசியல் சமநிலையை பராமரிக்க வேண்டியுள்ளது. தெற்கிலுள்ள வாக்காளர் அடித்தளம் விரிவான அதிகாரப் பகிர்வை எச்சரிக்கையாக அணுகுகிறது. மறுபுறம் ஜனநாயக நம்பகத்தன்மையை நிலைநிறுத்த தேர்தல்கள் அவசியமாகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் தேசிய மக்கள் சக்தி ஆதரவு அதிகரித்து வந்தாலும் அது இன்னும் முழுமையான கட்டமைப்பு வலிமையாக மாறவில்லை. இந்நிலையில் தேர்தல் நடத்துவது அரசியல் அபாயத்தை உருவாக்கக்கூடும். ஆகவே இந்த ஒத்திவைப்பு ஒரு கருத்தியல் எதிர்ப்பை விட தேர்தல் நேரக் கணக்கீட்டின் ஒரு பகுதியாகவே தோன்றுகிறது.

ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணம் இந்தச் சூழ்நிலைக்கு மேலும் முக்கியத்துவம் சேர்க்கிறது. இந்தியாவின் நிலைப்பாடு தெளிவானது. 13ஆம் திருத்தம் பலவீனப்படுத்தப்படக் கூடாது; பொருளடக்கமான அதிகாரப் பகிர்வு நிலைத்தன்மைக்கு அவசியம். இந்தியாவுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள், அரசமைப்புச் சீர்திருத்தங்களில் பின்னடைவு இருக்காது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவும், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், பிராந்திய பார்வைகளை நிர்வகிக்கவும் நோக்கமுடையவையாக இருந்திருக்கலாம். இந்தியா தற் காலிக தாமதத்தைப் பொறுத்துக் கொள்ளக்கூடும். ஆனால் கட்ட மைப்பு ரீதியான பின்னடைவை ஏற்காது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இது சுயபரிசோதனைக்கான தருணம். மாகாண சபை அமைப்பு அதன் குறைபாடுகள் இருந்தாலும் தற்போது கிடைக்கக்கூடிய ஒரே அரசமைப்புச் சட்ட ரீதியான அதிகாரப் பகிர்வு அமைப்பாகும். நடைமுறை சார்ந்த அரசியல் ஈடுபாடு மற்றும் அடையாள அரசியல் இடையே தொடரும் பிளவு, அரசின் மீது அழுத்தத்தை குறைக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கில் வாக்காளர்கள் இன்று ஆட்சித் திறன், பொருளாதார முன்னேற்றம், நிலப் பிரச்சினைகள், இளைஞர் வாய்ப்புகள் போன்ற நடைமுறை விஷயங்களில் அதிக அக்கறை காட்டுகின்றனர். இது தலைமுறை மாற்றத்தைக் காட்டுகிறது.





முன்னிலையில் மூன்று சாத்தியமான பாதைகள் உள்ளன. தேசிய மக்கள் சக்தி தனது ஆதரவை வலுப்படுத்தினால் தன்னம்பிக்கையுடன் தேர்தல்களை நடத்தக்கூடும். அரசியல் உறுதிப்பாடு இல்லையெனில் ஒத்திவைப்பு தொடரலாம்; இது ஜனநாயக சோர்வை உருவாக்கும். மற்றொரு சாத்தியம் நடைமுறை நோக்குடன் செயல்படும் புதிய தமிழ் தலைமுறை உருவாகி, உள்ளமைப்பை வலுப்படுத்தும் திசையில் அரசியலை மாற்றுவது.

அடுத்த மாதங்கள் முக்கியமானவை. மாகாண சபை விவகாரம் இனி சட்ட விவாதம் மட்டும் அல்ல. அது அரசியல் முதிர்ச்சி, நேரக் கணக்கீடு மற்றும் நம்பகத்தன்மையின் சோதனையாக மாறியுள்ளது. ஒத்திவைப்பு அரசின் சீர்திருத்தப் புகழை வலுப்படுத்துமா அல்லது பலவீனப்படுத்துமா என்பதை காலம் தீர்மானிக்கும். தமிழ் அரசியல் தலைமை ஒருங்கிணைப்பின் அவசியத்தை உணர வேண்டும். இந்தச் சந்திப்பின் ஒத்திவைப்பு ஒரு முடிவு அல்ல; அது ஒரு பெரிய அரசியல் கட்டத்தின் தொடக்கம். இச்சந்திப்பில் எடுக்கப்படும் திசை, மாகாண சபைகளின் எதிர்காலத்தையும் தமிழ் அரசியல் பிரதிநிதித்துவத்தின் தரத்தையும் தீர்மானிக்கும்.



# பெருந்தொகை பீடிகள், பீடி இலைகளுடன் லொறி ஒன்றை மடக்கிய கடற்படையினர்!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி தளுவ பகுதியில் இலங்கை கடற்படை நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, எண்பத்தாறாயிரத்து எண்ணூறு பீடிகள், ஆயிரத்து இரு நூற்று ஐம்பது கிலோகிராமை விட அதிகமான பீடி இலைகள், நூற்று முப்பத்திரண்டு பதப்படுத்தப்பட்ட பீடி இலை பொதிகள், சுமார் நூற்று மூன்று கிலோ கிராம் நிலக்கரி மற்றும் ஆயிரத்து ஐநூற்று தொண்ணூற்று நான்கு ஷாம்பு பாக்கெட்டுகள் ஆகியவற்றுடன் ஒரு சந்தேக நபரை ஒரு லொரியுடன் கடற்படையினர் கைது செய்தனர்.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கைக் கடற்படை கப்பல் தம்பபன்னியுடன் இணைக்கப்பட்ட தளுவ கடற்படைப் பிரிவினரால் தளுவ பகுதியில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான லொறி ஒன்று சோதனை செய்யப்பட்டது. அப்போது, சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பீடி, பீடி இலைகள், பதப்படுத்தப்பட்ட பீடி இலைகள், நிலக்கரி மற்றும் ஷாம்பு பாக்கெட்டுகள் ஆகியவை லொறியுடன் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னாரில் வசிக்கும் 28 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும், கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி, பீடி இலைகள், பதப்படுத்தப்பட்ட பீடி இலைகள், நிலக்கரி, ஷாம்பு பாக்கெட்டுகள் மற்றும் லொறி ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மதுவரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.





# ஹெரோயினுடன் வடமராட்சி கிழக்கில் கைதான இளைஞனுக்கு தடுப்புக்காவல்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

நேற்று முன்தினம் ஹெரோயினுடன் இயக்கச்சி புதுக்காட்டுப் பகுதியில் கைதாகிய இளைஞனை மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில், பளை பொலிஸ் பிரிவில்




உள்ள புதுக்காடு சந்தியில் இளைஞன் ஒருவரை 15 கிராம் 82 மில்லிகிராம் ஹெரோயினுடன் வடக்கு மாகாண குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

அவரை நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தி தடுப்புக் காவல் கோரிய நிலையில் மேலும் மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# ரி-20 உலகக் கிண்ணம் - 2026:
# 2ஆவது பெரிய வெற்றி



**இரண்டாமிடம் ஐக்கிய அமெரிக்கா**

| ஐ.அமெரிக்கா | நெதர்லாந்து |
|---|---|
| 196-6 | 103 |
| 20 ஓவர்கள் | 15.5 ஓவர்கள் |

**ஐக்கிய அமெரிக்கா 93 ஓட்டங்களால் வெற்றி**

**முதலிடம் இலங்கை | 105 ஓட்டங்களால் வெற்றி**

இலங்கை: 225-5 | 20 ஓவர்கள் ஓமான்: 120-9 | 20 ஓவர்கள்

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்தி வருகின்றன.

இதில் நேற்று நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் நெதர்லாந்தை 93 ஓட்டங்களால் ஐக்கிய அமெரிக்கா வென்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்கா 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 196 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 197 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நெதர்லாந்து அணி 15.5 ஓவர்களில் 103 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதனால் ஐக்கிய அமெரிக்கா 93 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தின் நாயகனாக 4 விக்கெட்டுகளைச் சாய்த்த ஐக்கிய அமெரிக்காவின் ஹர்மீற் சிங் தெரிவானார்.

ஐக்கிய அமெரிக்கா இந்தப் போட்டியில் வென்றமையே நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் மிகப் பெரிய இரண்டாவது வெற்றியாகப் பார்க்கப்படுகின்றது.

முதலிடத்தில் இலங்கை அணி உளளது. அந்த அணி 105 ஓட்டங்களால் ஓமானை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரி-20: ஏனைய இரு போட்டிகளின் முடிவுகள்

**சிம்பாப்வே - ஆஸி.**

169/2 146

23 ஓட்டங்களால் சிம்பாப்வே வெற்றி

ICC MEN'S T20 WORLD CUP INDIA & SRI LANKA 2026

**கனடா - ஐ.அ.இ.**

150/7 151/5

5 விக்கெட்டுகளால் ஐ.அ.இராச்சியம் வெற்றி

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 12.02.2026

**குழு - ஏ**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 3.050 |
| 2 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.932 |
| 3 | ஐ.அமெரிக்கா | 3 | 1 | 2 | - | - | 2 | 0.533 |
| 4 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.352 |
| 5 | நமீபியா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.884 |

**குழு - பி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 3.125 |
| 2 | சிம்பாப்வே | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.984 |
| 3 | ஆஸ்திரேலியா | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 1.100 |
| 4 | அயர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.175 |
| 5 | ஓமன் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -4.306 |

**குழு - சி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.625 |
| 2 | ஸ்கொட்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.950 |
| 3 | இத்தாலி | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.352 |
| 4 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.650 |
| 5 | நேபாளம் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.854 |

**குழு - டி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 2 | 2 | 2 | 0 | 0 | 4 | 1.919 |
| 2 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.425 |
| 3 | ஐ.அ.இராச்சியம் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -1.030 |
| 4 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -0.555 |
| 5 | கனடா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.526 |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி

# பொது இடத்தில் குப்பை கொட்டிய நபருக்கு கடும் எச்சரிக்கையுடன் 10,000 ரூபா தண்டம்



பருத்தித்துறையில் பொது இடத்தில் திண்மக்கழிவுகளை வீசிச்சென்ற நபர் சி.சி.ரி.வி. கமரா பதிவு மூலம் அடையாளம் காணப்பட்டு பருத்தித்துறை நீதவானால் கடும் எச்சரிக்கையுடன், 10,000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் திண்மக்கழிவுகள் கொட்டப்படுவதனை தடுக்கும் முகமாக அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுகின்ற பொது இடங்களை அடையாளப்படுத்தி கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அவதானிக்கப்பட்டு வருகிறது.

இதன்போது, பருத்தித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட அம்புலி ஓடை வீதியில் திண்மக்கழிவுகளை கொட்டிச் சென்றவர் இனங்காணப்பட்டு அவரிற்கு எதிராக பருத்தித்துறை நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஷினால் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதவான் இந்துஜா சிவலிங்கத்தால் மேற்படி நபருக்கு கடுமையான எச்சரிக்கையுடன், 10000 தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளராக வருணஸ்ரீ நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளராக வருண ஸ்ரீதனபாலவை நியமித்துள்ளார்.

அதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அவரிடம் கையளித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான வருண ஸ்ரீதனபால, 2024 நவம்பர் 29 முதல் இன்றுவரை டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் பதில் செயலாளராகப் பணியாற்றினார்.



# அரச சொத்து மதிப்பீட்டுப் பணிகளில் தனியார் துறைக்கு இடமளிக்க தீர்மானம்

இலங்கையில் தகுதியுள்ள சொத்து மதிப்பீட்டாளர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால், தனியார் துறையைச் சேர்ந்த தகுதியானவர்களுக்கும் அரச மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென அரசாங்க நிதி பற்றிய குழு பரிந்துரைத்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் அண்மைய கூட்டத்தில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா, தனியார் துறை மதிப்பீட்டாளர்களுக்கு அரச மதிப்பீட்டுப் பணிகளில் பங்களிக்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பது தமது குழுவின் நிலைப்பாடு எனத் தெரிவித்தார். எனினும், இது தொடர்பான கொள்கை மாற்றங்களை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றில் பணிபுரியும் மதிப்பீட்டாளர்களுக்கு இடையே நிலவும் சில முரண்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

"மதிப்பீட்டுத் திணைக்களத்தில் உள்ளவர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையில் உள்ளவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதை விரும்புவதில்லை. இந்த விவகாரம் விரைவில் தீர்க்கப்பட வேண்டும்," என ஹர்ஷா டி சில்வா வலியுறுத்தினார்.

அத்துடன், மதிப்பீட்டாளர்கள் எந்த நிறுவனங்களில் தமது தகுதியைப் பெறுகிறார்கள் என்பது தொடர்பிலும் சில சிக்கல்கள் நிலவுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, இந்த விவகாரம் விரைவில் தீர்க்கப்படும் என உறுதியளித்தார். இலங்கையிலுள்ள மதிப்பீட்டாளர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையே இந்தத் தட்டுப்பாட்டிற்கான பிரதான காரணம் என அவர் இதன்போது வெளிப்படுத்தினார்.



# பரீட்சார்த்திகளுக்கு அடையாள அட்டை விவரங்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்க விசேட சேவை

சாதாரண தரப் பரீட்சை விண்ணப்பதாரர்களின் தேசிய அடையாள அட்டை விபரங்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குவதற்காக, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் இன்று சனிக்கிழமை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதன் தலைமை அலுவலகம் மற்றும் காலி, குருநாகல், வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உள்ள மாகாண அலுவலகங்கள் இன்று முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 12.30 வரை செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாத பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவசியமான "அடையாள அட்டைத் தகவல் உறுதிப்படுத்தல் கடிதங்களை" வழங்குவதற்காகவே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் இக்கடிதங்களை ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.drp.gov.lk ஊடாகவும் நேரடியாகத் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

இதுவரை பரீட்சை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத பாடசாலை விண்ணப்பதாரர்கள், உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு அதிபர் அல்லது கிராம உத்தியோகத்தரால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உரிய ஆவணங்களுடன் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பரீட்சார்த்திகள் எவ்விதத் தடங்கலுமின்றிபரீட்சைக்குத்தோற்றுவதைஉறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# டித்வா சூறாவளி அனர்த்தம்:

## பாதிக்கப்பட்டவர்களை மீளக் குடியமர்த்தும் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வு

டித்வா சூறாவளியினால் வீடுகளை இழந்த கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருநாகல், கேகாலை மற்றும் பதுளை ஆகிய மாவட்ட மக்களின் வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் அதற்குத் தேவையான காணிகளை ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்த கலந்துரையாடல், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இங்கு எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நேரடியாகத் தலையிட்ட அமைச்சர் ஆனந்த விஜேபால, இந்த மீளக் குடியேற்றச் செயல்முறையை மிக விரைவில் நிறைவு செய்வதே ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் இதற்காகத் தேவையான நிதி போதியளவு ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மீளக் குடியேற்றத்தின் போது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னர் வீடு இருந்த இடத்திலேயே மீளக் குடியமர்த்தக்கூடிய மக்கள் மற்றும் வேறு இடங்களில் குடியேற்றப்பட வேண்டியவர்கள் என அடையாளம் காணும் பணிகள் மாவட்ட ரீதியாக ஆராயப்பட்டன.

கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து அறிக்கைகளைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட பகுதிகளில் போதுமான அதிகாரிகள் இல்லையென்றால், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கைகளை சமர்ப்பித்து நிறைவு செய்துள்ள மாவட்டங்களில் உள்ள அதிகாரிகளின் உதவியைப் பெற்று ஒரு மாதத்திற்குள் பணிகளை முடிக்குமாறு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவுறுத்தினார்.

மேலும், இந்த நடவடிக்கைகளுக்கான வாகனங்கள் மற்றும் வசதிகளைப் பெறுவதில் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்ப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கைகளை வழங்கும்போது அதிக ஆபத்துள்ள பிரதேசங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தி, முன்னுரிமையின்படி அந்த நடவடிக்கைகளை விரைவில் முடிக்குமாறு அமைச்சர் அறிவுறுத்தினார்.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அறிக்கைகள் தொடர்பாக எழுப்பப்படும் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுடன் கலந்துரையாடி, முறையான ஆய்வுக்குப் பிறகு அவற்றின் பாதுகாப்பை உறுதிசெய்து, தொடர்புடைய பணிகளைத் தொடர வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி போதுமான அளவு நிலத்தை விடுவித்த பின்னர் அந்த வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தைத் தொடங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

காணியுடன் கூடிய வீடு கொள்வனவு செய்ய விரும்புவோருக்கு காணி கொள்வனவின் போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், ஜயபூமி போன்ற கொடுப்பனவுப் பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முறையான வேலைத்திட்டத்தின் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் 25,000 ரூபா கொடுப்பனவு, 50,000 ரூபா கொடுப்பனவு, மற்றும் 15,000 ரூபா மாணவர் உதவித்தொகை முழுமையாக வழங்கப்பட்டுவிட்டதாக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், சில மாவட்டங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களில் உள்ள சிக்கல்களை சரிசெய்து துல்லியமான தரவுகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவுறுத்தினார்.

கிரிஉல்ல நகரம் நீரில் மூழ்கியதால் சேதமடைந்த வர்த்தக நிறுவனங்களுக்கு இழப்பீடு வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்தும் அமைச்சர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

பிரதேச சபையின் கீழ் வரிப்பணம் செலுத்தும் அனைத்து வர்த்தக நிறுவனங்களுக்கும் 02 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குவது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்த்து, இழப்பீடு வழங்குமாறு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவுறுத்தினார்.





# கரைவலை மீனவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட கரைவலை மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை ஜனாதிபதி அலுவலகத்திற்கு அழைத்த ஜனாதிபதி, அவர்களுடன் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டமையுடன், 2010 ஆம் ஆண்டு தொடங்கி, தொழிலாளர் பிரச்சினைகள் காரணமாக 2013 ஆம் ஆண்டு முதல் வின்ச் இயந்திரத்தைப் பயன்படுத்தி செயல்பட்டு வரும் கரைவலை மீன்பிடித் தொழில்துறையின் தற்போதைய நிலைமை குறித்து அவர்கள் ஜனாதிபதியிடம் விளக்கினர்.

மேலும், மீனவர் பிரதிநிதிகள், தாங்கள் எதிர்கொள்ளும் நிலைமை குறித்து கவனத்தை ஈர்த்து, இந்தக் கலந்துரையாடலை வழங்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

மீனவர் பிரதிநிதிகள் தங்கள் அனுபவங்களின் அடிப்படையில் எழுப்பிய அனைத்துப் விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, கரைவலை மீன்பிடித் தொழில் தொடர்பாக எழுந்துள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது, பொருளாதார ரீதியாக யாருடைய வாழ்க்கைத் தரத்திலும் பாதிப்பை ஏற்படுத்த அரசாங்கம் விரும்பவில்லை என்றும் ஒவ்வொருவரின் பொருளாதார நிலைமையையும் வலுப்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது என்றும் வலியுறுத்தினார்.

மேலும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், பொது மீனவ சமூகம் முன்வைத்துள்ள முறைப்பாடுகள், சுற்றுச்சூழல் அமைப்புகள், இது தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற அரச நிறுவனங்கள், கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



அதன்படி, மீனவர்களுக்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பைத் தடுப்பதற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சர்வதேச இணக்கப்பாடுகளுக்கு ஏற்பவும், எதிர்கால சந்ததியினருக்காக கடற்றொழில் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதன்படி, அனைத்து தரப்பினரும் இணைந்து குறுகிய காலத்திற்குள் கலந்துரையாடல்கள் மூலம் மிகவும் பொருத்தமான தீர்வுகளை பரிந்துரைக்க இதன்போது ஒப்புக்கொண்டதுடன், போராட்டத்தை கைவிடவும் முடிவு செய்யப்பட்டது.

அனைத்து தரப்பினரின் பங்கேற்புடன் அடுத்த திங்கள் கிழமை மேற்படி கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கலந்துரையாடல்கள் இடம்பெறும் காலத்தில் தற்போது கரைவலை முறையின் கீழ் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்கொள்ளும் குத்தகை போன்ற கட்டணச் சிக்கல்கள் குறித்து நிதி அமைச்சுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் மேலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.










# மதுவரிக் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை

மதுவரித் திணைக்களத்தின் வரி வருமானத்தை அதிகரித்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளுக்கான செயற்பாட்டுக் குழுவின் கூட்டம் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரின் தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, மதுவரித் திணைக்களத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்திறனாகவும் முன்னெடுப்பதற்காக இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவுசெய்ய உத்தேசிக்கப்பட்ட மதுவரி வருமான முகாமைத்துவக் கட்டமைப்பின் முன்னேற்றம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தின் அரச நிறுவன நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மதுவரித் திணைக்களத்தின் நவீனமயமாக்கல் மற்றும் மறுசீரமைப்புகளுக்கு உயர் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக பிரதி அமைச்சர் இங்கு தெரிவித்தார். மதுவரித் திணைக்களத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அதிகாரிகளும் இதற்கு முழு ஆதரவைத் தெரிவித்தனர்.

மேலும், மதுவரித் திணைக்களம் கடந்த 2025 ஆம் ஆண்டில் அடையப்பட்ட நிதி செயற்பாடுகளுக்காக பிரதி அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பாராட்டியமையுடன், இந்த ஆண்டு மேலும் உயர் நிதி முன்னேற்றத்தை அடைய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர்.

தற்போதைய சமூக மற்றும் தொழில்நுட்ப போக்குகளுக்கு ஏற்ப மதுவரிக் கட்டளைச் சட்டத்தை திருத்தும் பணிகளை விரைவுபடுத்தவும், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் திருத்தங்களை நிறைவு செய்து சட்டவரைஞருக்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தின் செயல்திறனை அதிகரிக்க புதிய சேவை யாப்பின் அவசியத்தை குழு வலியுறுத்தியதுடன் இதற்கு மேலதிகமாக அதிகாரிகளின் பதவி உயர்வுகள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவை வலுப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், நாட்டில் சட்டவிரோத மது வர்த்தகம் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதில் பொதுமக்களின் ஆதரவைப் பெற, எந்தவொரு பகுதியிலும் நிகழும் மது மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் குறித்த தகவல்களை 1913 என்ற அவசர இலக்கத்தின் மூலம் மதுவரித் திணைக்களத்திற்கு தெரிவிக்குமாறு மதுவரித் திணைக்களத்தின் வரி வருமானத்தை அதிகரித்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளுக்கான செயற்பாட்டுக் குழு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டது.

இந்தக் கலந்துரையாடலில், மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம். பி. என். ஏ. பிரேமரத்ன, நிதி அமைச்சு மற்றும் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள், மதுவரித் திணைக்களத்தின் பிரதானிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருமான நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் பணியகத்தின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# சேலத்தில் த.வெ.க. கூட்டத்தில் வடமாநில இளைஞர் உயிரிழப்பு

சேலத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வந்த வடமாநில இளைஞர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் குறித்து அன்னதானப்பட்டி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம் சீலநாயக்கன்பட்டி பை-பாஸ் தாளமுத்து நடராஜன் மைதானத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியை காண சீல்நாயக்கன்பட்டி சிவசக்தி நகரை சேர்ந்த வடமாநில இளைஞர் சுராஜ் (வயது 37) சென்றுள்ளார். சுராஜ் கடந்த 20 வருடத்துக்கு முன்பே தனது மனைவி, ஒரு மகன், ஒரு மகளுடன் சேலத்துக்கு வந்து வசித்து வருகிறார்.

சுராஜ் வெள்ளி கொலுசு தயாரிக்கும் வேலைக்கும், கட்டட வேலைக்கும் சென்று குடும்பத்தை நடத்தி வந்தார். நேற்று நடந்த த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்சியில் பங்கேற்க கட்சியினருக்கு தனிப்பட்ட முறையில் அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்தது. அடையாள அட்டை வைத்திருந்த நபர்களை மட்டுமே நிகழ்ச்சி மைதானதுக்குள் பொலிஸார் அனுமதித்தனர். ஆனால், சுராஜ் அடையாள அட்டை ஏதுமின்றி த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடக்கும் மைதானத்துக்கு சென்றுள்ளார்.

அங்கு நீண்ட நேரம் வெயிலில் காத்திருந்த சுராஜ் திடீரென மயங்கி விழுந்தார். மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் வண்டியை உடனடியாக வரவழைத்து, மயங்கி விழுந்த



சுராஜை மீட்டு கொண்டு சென்றார். சீலநாயக்கன்பட்டி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சுராஜ் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தகவல் அறிந்து வந்த த.வெ.க. மத்திய மாவட்ட செயலாளர் தமிழன் பார்த்திபன், சுராஜ் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். இதுபற்றி செய்தியாளர்கள் தமிழன் பார்த்திபனிடம் கேள்வி எழுப்பிய போது, முழுமையான தகவல் தெரிந்த பின்னரே இதுபற்றி எதுவும் கூற முடியும் என்று அங்கிருந்து சென்றுவிட்டார். அன்னதானப்பட்டி பொலிஸார் தனியார் மருத்துவமனையில் இருந்த சுராஜ் உடலை பொறுப்பேற்று, சேலம் அரசு மருத்துவமனை பிரேதபரிசோதனை கூடத்துக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து அன்னதானப்பட்டி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பொலிஸாரின் முதல்கட்ட விசாரணையில், கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு உடல் நிலை பாதிப்பட்ட சுராஜ், இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார்.

இந்நிலையில், த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் நீண்ட நேரம் சுராஜ் நின்றதால், மயக்கமடைந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. இது குறித்து அன்னதானப்பட்டி பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, த.வெ.க. இணைப் பொதுச் செயலாளர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் தனது எக்ஸ் தள பக்கத்தில் அளித்துள்ள விளக்கத்தில்,

"இன்று த.வெ.க. சார்பில் சேலத்தில் நடைபெற்ற கூட்டத்தைக் காண வந்த சூரஜ் என்ற இளைஞர் திடீர் உடல்நலக்குறைவால் மயங்கி உள்ளார். அவருக்கு உடனடியாக முதலுதவி செய்யபட்டு கழக நிர்வாகிகள் சரியான நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் மாரடைப்பால் சூரஜ் மரணமடைந்தமை வேதனை அளிக்கிறது. இளைஞர் சூரஜின் இந்த எதிர்பாராத மரணத்துக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் சினிமா எல்லா வகையிலும் இந்தியாவுக்கே 'ட்ரெண்ட்செட்டர்'

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

தமிழ் திரையுலகம் உள்ளடக்கத்திலும் சரி, தொழில்நுட்பரீதியாகவும் சரி, எல்லா வகையிலும் இந்தியாவுக்கே ஒரு "ட்ரெண்ட்செட்டர்" ஆக விளங்கிக் கொண்டிருக்கிறது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருது மற்றும் சின்னத்திரை விருதுகள் வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"இந்தியாவிலேயே மிகவும் துடிப்பான துறை என்றால் நம்முடைய தமிழ் சினிமாத் துறைதான். வருடா வருடம் ஒவ்வொரு "ஜோனரிலும்" முக்கியமான படங்களை நம்முடைய தமிழ் திரையுலகம் வழங்கிக் கொண்டிருக்கிறது.

கலைத்துறை சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சியிலும், கடந்த மூன்றரை, நான்கு வருடங்களாக நான் கலந்து கொள்வதில்லை. ஆனால், இந்த நிகழ்ச்சியை என்னால்தவிர்க்கமுடியவில்லை.ஏனென்றால், நிச்சயம் நானும் உங்களில் இருந்து உருவாகி வந்தவன்தான். இன்னும் சொல்லப்போனால் ரொம்ப நாளுக்குப் பிறகு பள்ளி வகுப்பறைக்கு வந்தது போன்று ஒரு உணர்வு உள்ளது. அந்த உரிமையோடும், பெருமையோடும் உங்களையெல்லாம் சந்திக்க நான் வருகை தந்திருக்கின்றேன்.

இந்த விருதுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டவுடனே நிறைய விமர்சனங்கள் வந்தன. அவர்களுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஒரே பதில், பல ஆண்டு காலமாக இந்த விருதுகள் அறிவிக்கப்படாமல், வழங்கப்படாமல் இருந்தது. நம்முடைய முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் உடனடியாக இந்த விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்தார்.

கலைத்துறையில் இருக்கக்கூடிய உங்கள் அத்தனைபேருக்கும் தெரியும். விருது என்று அறிவித்து கொடுத்தால், ஒரே நேரத்தில் எல்லாருக்கும் கொடுக்க முடியாது. எனவே விருது பெற்றவர்கள் தமிழ் கலைத்துறைக்கு எவ்வளவு பெருமைகளைத் தேடி தந்து கொண்டிருக்கிறீர்களோ, அதே அளவிற்கு மற்றவர்களும் நிச்சயமாக நம்முடைய தமிழ் நாட்டிற்கு பெருமைகளைத் தேடிதந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான அங்கீகாரமும் நிச்சயமாக உரிய நேரத்தில் கண்டிப்பாக கிடைக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணா, கலைஞர் இரண்டு பேரும் கலைத்துறையில் எவ்வளவோ சாதித்துள்ளார்கள். கலைத்துறையில் ஈடுபட்டவர்கள் மட்டும் கிடையாது. கலைத்துறையில் மிகுந்த ஈடுபாட்டோடு




இருந்தவர்கள்தான் இவர்கள் இரண்டு பேரும். இவர்கள் இரண்டு பேர் தமிழ் சினிமாவுடைய போக்கையே மாற்றியவர்கள். அதே மாதிரி, நம்முடைய முதலமைச்சரும் திரைத்துறையிலும் சரி, சின்னத்திரையிலும் சரி பணியாற்றியிருக்கிறார்கள்.

இன்றைக்கு தமிழ் திரையுலகம் உள்ளடக்கத்திலும் சரி, தொழில்நுட்பரீதியாகவும் சரி, எல்லா வகையிலும் இந்தியாவிற்கே ஒரு "ட்ரெண்ட் செட்டர்" ஆக விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு, இந்த விருதுகளை வழங்குவதற்கு ஒரே ஒரு காரணம் மட்டும் தான் உண்டு, நல்ல படைப்புகளையும், கலைஞர்களையும் கொண்டாட வேண்டும், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். உத்வேகப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றது." என்று தெரிவித்தார்.






# அமெரிக்க பணவீக்கம் ஜனவரியில் குறைந்தது

அமெரிக்காவில் எரிசக்தி மற்றும் பயன்படுத்தப்பட்ட கார்களின் விலை குறைந்ததை அடுத்து, கடந்த மாதம் பணவீக்கம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளதாக அந்நாட்டு தொழிலாளர் துறை தெரிவித்துள்ளது.

ஜனவரி வரையிலான கடந்த 12 மாதங்களில் நுகர்வோர் விலைச் சுட்டெண் 2.4 வீதமாக உயர்ந்துள்ளது.

இது முந்தைய மாதத்தின் 2.7 வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும்.

மேலும், கடந்த மே மாதத்திற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த பணவீக்க உயர்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

பணவீக்கம்குறைந்துள்ளதால்,விலையேற்றம் குறித்த அச்சமின்றி மத்திய வங்கி வட்டி விகிதங்களைக் குறைக்க முடியும் என்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பலரின் வாதங்களுக்கு இது வலுசேர்த்துள்ளது.

பணவீக்கம் குறைந்திருந்தாலும், வரும் மாதங்களில் இது சவாலாக அமையலாம் என சில ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

நிறுவனங்கள் இறக்குமதி வரிகளின் சுமையை நுகர்வோர் மீது சுமத்தத் தொடங்கினால் விலை உயரலாம்.

தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக சேவைத் துறையில் விலையேற்றம் ஏற்படலாம்.

இருப்பினும், தற்போதைக்கு இறக்குமதி வரிகளினால் பெரிய பாதிப்புகள் ஏதும் தென்படவில்லை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# பிரித்தானியாவில் பொது இடங்களில் புகைப்பிடிக்கத் தடை விதிக்க திட்டம்






பிரித்தானியாவில் பொது இடங்களில் புகைப்பிடித்தல் மற்றும் வேப்பிங் பழக்கத்திற்கு கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து பிரித்தானிய அரசு திட்டமிட்டு வருகிறது.

குழந்தைகள் மற்றும் நோயாளிகளை பாதுகாக்கும் வகையில் இந்த புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய கட்டுப்பாடுகளின் படி, குழந்தைகளுடன் காருக்குள் பயணிக்கும் போது புகைப்பிடித்தல் மற்றும் வேப்பிங் கருவிகளை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் புகைப்பிடித்தல் மற்றும் வேப்பிங் கருவிகளை பயன்படுத்த கூடாது.

மருத்துவமனை அருகில் மற்றும் உள்ளாக விளையாட்டு அரங்கங்களுக்குள் ஏற்கனவே புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அது தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்க 12 வார கருத்துக் கேட்பு ஆலோசனை கூட்டம் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த கருத்துக் கேட்பு ஆலோசனை கூட்டம் மே 8 ஆம் திகதி அன்று நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் அரசின் அடுத்த 10 ஆண்டுகளுக்கான சுகாதார திட்டத்தின் ஒரு பகுதி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் வான்வெளியில் இருந்து விலகி இருக்குமாறு ஐரோப்பிய ஒன்றிய விமானங்களுக்கு அறிவுறுத்தல்

எதிர்வரும் மார்ச் 31 வரை ஈரானின் வான்வெளியில் இருந்து விலகி இருக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் விமான நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய போக்குவரத்துப் பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

ஈரான் மீதான நெருக்கடியை நாளுக்கு நாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிகரித்து வருகிறார்.

ஒரு பக்கம், ஈரானுடன் அணு சக்தி தொடர்பில் பேச்சுவார்த்தையும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஈரான் – அமெரிக்கா பேச்சுவார்த்தை ஒரு ஒப்பந்தத்தில் முடிய வாய்ப்பிருப்பதால், அதை சீர்குலைக்கும் திட்டங்களுடன் இஸ்ரேலும் களமிறங்கியுள்ளது.

ஈரான் தொடர்பில் தமது உளவுத்துறை தரவுகளை பகிர்ந்துகொள்ள ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்துள்ளார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு.

ஏற்கனவே அமுலில் இருந்த எச்சரிக்கையை ஐரோப்பிய ஒன்றிய போக்குவரத்துப் பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணையம் நீட்டித்துள்ளது.

அத்துடன், பல்வேறு வகையான ஆயுதங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளின் இருப்பு மற்றும் சாத்தியமான பயன்பாடு, நாடுகளின் கணிக்க முடியாத பதிலடிகளால், அனைத்து உயரங்களிலும் விமான நிலைகளிலும் இயக்கப்படும் சிவில் விமானங்களுக்கு அதிக ஆபத்தை உருவாக்குகிறது என ஐரோப்பிய ஒன்றிய போக்குவரத்துப் பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணையம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, எந்தவொரு தாக்குதலுக்கும் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் கூளுரைத்துள்ளது, மேலும் அண்டை நாடுகள் தாக்குதலில் ஈடுபட்டால் அவர்களும் தங்கள் கோபத்திற்கு இலக்காக நேரிடும் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 14.02.2026




இன்று நீங்கள் பதற்றமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்கவைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமையாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத்திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள்- 14.02.2026




இன்று முன்னேற்றகரமான பலன்களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் மன உறுதி மற்றும் தைரியம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும். பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.

# வவுனியாவில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 600 வீடுகள் பூட்டப்பட்ட நிலையில் உள்ளன

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தகவல்

(கி.வசந்தன்)

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீடுகளில் 600 வீடுகள் வவுனியாவில் பூட்டப்பட்ட நிலையில் உள்ளன என வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் இன்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.



தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வவுனியா மாவட்டத்தில் 3,349 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவில் 3,457 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 2,554 வீடுகளும் வழங்கப்பட்டிருந்தன. வவுனியா மாவட்டத்தில் பல வீடுகள் இறுதி கட்டத்தில் உள்ளன. பூர்த்தி செய்யும் நிலையில் உள்ள வீடுகளுக்கான வேலைகளை முடித்து விட்டால் வவுனியாவில் 900 வீடுகள் பூர்த்தியாகும். அவை சின்ன வேலைகளில் தங்கியுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். இதற்கு பதில் அளித்த போதே கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீடுகளில் 600 வீடுகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. கடந்த அரசாங்கத்தின் போது சில குடும்பங்களுக்கு இரண்டு, மூன்று வீடுகள் வழங்கப்பட்டு அதில் அவர்கள் குடியிருக்காமல் பூட்டப்பட்டுள்ளன. அவ்வாறு 600 வீடுகள் உள்ளன. மடுகந்த, குடாகச்சகொடி, ஈரப்பெரியகுளம், கலாபோகஸ்வேவ போன்ற இடங்களில் அவ்வாறு வீடுகள் உள்ளன.

சஜித் பிரேமதாஸாவால் வீடுகள் வழங்கப்பட்டர்களில் வேறு வீடுகள் இல்லாதவர்களின் வீடுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். அரசியலுக்காக இவ்வாறு பல இடங்களில் வழங்கப்பட்டுளளன. மன்னாரில் 1,500 வீடுகள் உள்ளன. அவ்வாறான வீடுகளை மீள எடுத்து வீடு இல்லாத மக்களுக்கு வழங்குவது குறித்து கவனம் செலுததியுள்ளோம். பாதிக்கப்பட்ட வீடு இல்லாத மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.